**கோபிசெட்டிபாளையம் நகராட்சி**

**31.10.2025 ந் தேதி நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்**

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சி உட்பட்ட தலைமை சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள ஆற்று நீரேற்றும் நிலையத்தில் 120 HP டர்பைன் மோட்டர் இயங்கிக்கொண்டு உள்ளது. தற்பொழுது பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு செல்வதால் டர்பைன் மோட்டர் மற்றும் பம்பு உள்ள கிணற்றில் கீழ் மட்டத்தில் மணல் மற்றும் குப்பைகள் அதிகமாக தேங்கி விட்டதால் தண்ணீர் பம்பிங் அளவு குறைகின்றது. மேற்படி, மணல்களை கம்ரஸர் மூலம் அள்ளி வெளியேற்றுவதற்கு உத்தேச செலவீனமாக ரூ.50,000/– ஆகும். செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்காண் செலவின தொகை ரூ.50,000/–த்தினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் TURIP 2025–2026 Phase III – ல் சேதமடைந்த சாலைகளில் வார்டு எண்–01, 02, 09, 12, 13, 14, 20, 24 ஆகிய இடங்களில் தார் சாலை மேற்கொள்ள Roc No : 9730/2025/SS1 Date: 30.05.2025 வாயிலாக ரூ.78.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சந்தியாவனதுறை, கணபதி நகர், தாமு நகர், முல்லை நகர், கிருஷ்ணா நகர், கவின் கார்டன் ஆகிய இடங்களில் அதிக அளவில் POT HOLES மற்றும் PATCHES இருக்கிறது. அனுமதி வழங்கப்பட்ட பின்னர் சாலை இயற்கை இடற்பாடுகளால் மற்றும் மழையினால் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்பொழுது சாலையின் சேதம் அதிக அளவில் இருப்பதால் மேற்கண்ட சாலைகளுக்கு முழு அகலத்திற்கு WMM மற்றும் அதற்குண்டான PRIME COAT மற்றும் TACK COAT பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. இதனால் இச்சாலையின் ஸ்திரதன்மையினை பாதுகாக்க மற்றும் பொதுமக்கள் நலன் கருதி அதிகப்படியான POT HOLES மற்றும் PATCHES–யினை செப்பனிட கூடுதல் மதிப்பீடு ரூ.3.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகளை பொது நிதியில் மேற்கொள்ள மற்றும் பணியின் அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கையினை தொடர மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு:** 1. முன் அனுமதி வழங்கப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்

3. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண் 01, 02, 07, 08, 10, 11, 12, 13, 15, 16, 24, 30 ஆகிய வார்டுகளில் ஸ்ரீராமபுரம், காளியண்ணன், ராமானந்தா நகர், மாரியம்மன் கோவில் தெரு, சக்தி சாந்தி நகர், சாய் அபிராமி நகர், பிருந்தாவன் கார்டன் , கவின் கார்டன், ஜெயராம் எக்ஸ்டன்சன் மற்றும் இதர சாலைகளில் Roc No: 1513/2025/B1 Date: 07.04.2025 வாயிலாக சாலை பணிகள் ரூ.93.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணி மேற்கண்ட பகுதிகளில் சாலை மிகவும் சேதம் அடைந்துள்ளதால் TURIP 2025–26–ன் கீழ் அனுமதி வழங்கப்பட்டு , தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணி உத்திரவு

வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தற்பொழுது சாலை மழை மற்றும் இதர இயற்கை இடற்பாடுகளால் அதிக அளவில் POT HOLES மற்றும் PATCHES சாலையில் இருக்கிறது. மதிப்பீட்டில் சிறிய அளவே WMM மற்றும் அதற்குண்டான PRIME COAT மற்றும் TACK COAT பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. இதனால் இச்சாலையின் ஸ்திரதன்மையினை பாதுகாக்க மற்றும் பொதுமக்கள் நலன் கருதி அதிகப்படியான POT HOLES மற்றும் PATCHES–யினை செப்பனிட ரூ.10.25 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் பொது நிதியில் மேற்கொள்ள மற்றும் பணியின் அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கையினை தொடர மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** 1. முன் அனுமதி வழங்கப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.
2 மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்

4. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் TURIP 2025–26 Phase III – ல் சேதமடைந்த சாலைகளில் வார்டு எண்–02,03,05,06,08,10,11,12,13,14,15,25 ஆகிய இடங்களில் தார் சாலை மேற்கொள்ள Roc No : 9730/2025/SS1 Date: 30.05.2025 வாயிலாக ரூ.78.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருமால் நகர், திருமலை நகர், மாதேசியப்பன் கோவில் 3–வது வீதி, ராமர் எக்ஸ்டன்சன் , ஜெயராம் வீதி, கருமையா வீதி, நடு வீதி, திரு.வி.க சாலை, பழைய ஆஸ்பத்திரி வீதி, குப்தா லே அவுட், கல்யாணி நகர் 4–வது வீதி, மல்லிகை நகர், அங்காளம்மன் நகர், சீதம்மாள் நகர், ஸ்ரீநகர், காரை சந்து ஆகிய இடங்களில் POT HOLES மற்றும் PATCHES அதிக அளவில் இருக்கிறது. Roc No: 9730/2025/SS1 Date: 30.05.2025 வாயிலாக ரூ.51.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பின்னர் சாலை இயற்கை இடற்பாடுகளால் மற்றும் மழையினால் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் தற்பொழுது சாலையின் சேதம் அதிக அளவில் இருப்பதால் மேற்கண்ட சாலைகளுக்கு முழு அகலத்திற்கு WMM மற்றும் அதற்குண்டான PRIME COAT, TACK COAT மற்றும் BM பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது. இதனால் இச்சாலையின் ஸ்திரதன்மையினை பாதுகாக்க மற்றும் பொதுமக்கள் நலன் கருதி அதிகப்படியான POT HOLES மற்றும் PATCHES–யினை செப்பனிட கூடுதல் மதிப்பீடு ரூ.5.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகளை பொது நிதியில் மேற்கொள்ள மற்றும் பணியின் அவசரம் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல் நடவடிக்கையினை தொடர மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:** 1. முன் அனுமதி வழங்கப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை வணிக வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தை வணிக வளாக IUDM கடைகளுக்கு 07.10.2025 ஆம் தேதியன்று முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடை பெற்ற கடைகள் :

தினசரி சந்தை IUDM கடை எண். A.01, A.16, A.23, G.1 மற்றும் கடை எண். G.2 (5 கடைகள்) மேற்படி 5 கடைகளுக்கு நடைபெற்ற முன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், கடை எண். A.01, G.1 மற்றும் கடை எண். G.2 ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. கடை எண். A.16, A.23 இரண்டு கடைக்கு மட்டும் நான்கு நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். விபரம் பின்வருமாறு.

| வ.எண் | கடையின் விபரம் | ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர் விபரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | தினசரி சந்தை IUDM கடை எண். **A.16** | திருமதி.ஆர்.நிர்மலாதேவி, க/பெ. ராமமூர்த்தி 16, மாரியம்மன் கோவில் வீதி, கலிங்கியம். | ரூ.15,250 /– |
| | | திரு.ஜெகதீசன். த/பெ.சென்னியப்பன். மாக்கம்பாளையம். கூத்தம்பாளையம் | ரூ.15,300 /– |
| 2 | தினசரி சந்தை IUDM கடை எண். A.23 | திருமதி.து.அங்குலட்சுமி. க/பெ. துரைசாமி. வாஸ்து நகர். கோபிசெட்டிபாளையம், | ரூ.15,200 /– |
| | | திருமதி.கே.சுதா. க/பெ. என். கேசவன். 7F, திருமலை நகர், கோபிசெட்டிபாளையம். | ரூ.15,300 /– |

வரிசை எண் 1 இல் கண்டுள்ள, தினசரி சந்தை IUDM கடை எண். A.16 க்கு திருமதி.ஆர்.நிர்மலாதேவி என்பவர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ,15,250/– ஐ விட கூடுதலாக ரூ.50/– சேர்த்து திரு.ஜெகதீசன் என்பவர் ரூ.15,300/–க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ளார். வரிசை எண் 2 இல் கண்டுள்ள, தினசரி சந்தை IUDM கடை எண். A.23 க்கு வரிசை எண் 3 ல் கண்டுள்ள திருமதி.து.அங்குலட்சுமி என்பவர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ,15,200/– ஐ விட கூடுதலாக ரூ.100/– சேர்த்து வரிசை எண் 4 ல் கண்டுள்ள திருமதி.கே.சுதா என்பவர் ரூ.15,300/– க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ளார் எனவே, மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில், தினசரி சந்தை IUDM கடை எண். A.16 கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,300/– குறிப்பிட்டுள்ள திரு.ஜெகதீசன் என்பவருக்கும், தினசரி சந்தை IUDM கடை எண். A.23 கொண்ட கடைக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.15,300/– குறிப்பிட்டுள்ள திருமதி.கே.சுதா என்பவருக்கும் கடை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் ஏலம் போகாத மீதமுள்ள மூன்று கடைகளுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ந.க.எண். 1272/2023/அ3

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

6. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டுள்ள ஆண்டு குத்தகை இனங்களுக்கு 23.10.2025ந் தேதியன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி விபரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தொகை (ஆண்டுக்கு) | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] |
| 1 | நகராட்சி தலைமை குடிநீர் நிலையத்தில் உள்ள மரங்களின் பயன்களை அனுபவிக்கும் உரிமம் | திரு,K.A. பழனிச்சாமி, த/பெ. ஆறுமுகம்,<br>க,எண் 219, மெயின் ரோடு,<br>ஒத்தக்குதிரை,<br>கே.மேட்டுப்பாளையம்(PO)<br>கோபிசெட்டிபாளையம். | ரூ,42,300/- | இல்லை |
| | | திரு,O.N. ஆனந்தகுமார் த/பெ. நடராஜன்,<br>க,எண் 4/476, புது வீதி, கோபி மெயின் ரோடு,<br>ஒத்தக்குதிரை,<br>கே.மேட்டுப்பாளையம்(PO)<br>கோபிசெட்டிபாளையம். | ரூ,39,000/- | |

வரிசை எண் 1ல் கண்டுள்ள இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.42,300/-க்கு திரு,K.A. பழனிச்சாமி த/பெ. ஆறுமுகம் என்பவரால் அளிக்கப்பட்டுள்ளது.. இந்த ஒப்பந்தப்புள்ளி தொகையானது சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூ.24,917/- ஐ விட ரூ.17,383 /- அதிகமாகவும், மூன்றாண்டு சராசரி தொகை ரூ. 23,746/- ஐ விட ரூ.18,554/- கூடுதலாகவும் உள்ளது. எனவே உயர்ந்தபட்ச ஒப்பந்தபுள்ளி குறிப்பிடப்பட்டுள்ள திரு,K.A. பழனிச்சாமி த/பெ. ஆறுமுகம் என்பவருக்கு மேற்படி ஆண்டு குத்தகை இனத்தை 01.12.2025 ம் தேதி முதல் மூன்று ஆண்டுகளுக்கு அளிக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். 23.10.2025 ந் தேதியன்று மறு ஏல அறிக்கையில் கண்டுள்ள வரிசை 1 மற்றும் 2 ஆகிய குத்தகை இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே மேற்படி இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி

கோரவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது (. ந.க.எண். 2560/2023/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

7. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 24.10.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள் திருமால்நகர், திருமலை நகர், மாதேசியப்பன் கோவில் 3–வது வீதி, ராமர் எக்ஸ்டன்சன், ஜெயராம் வீதி, கருமையா வீதி, நடு வீதி, திரு.வி.க சாலை, பழைய ஆஸ்பத்திரி வீதி, குப்தா லே அவுட், கல்யாணி நகர் 4–வது வீதி, மல்லிகை நகர், அங்காளம்மன் நகர், சீதம்மாள் நகர், ஸ்ரீநகர், காரை சந்து ஆகிய சாலைகளில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல். | 5,10,000 | M/S RS INFRA ஒப்பந்ததாரர் | 0.11% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S R.MUTHUSAMY AND COMPANY ஒப்பந்ததாரர் | 26.27% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/S RS INFRA ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 24.10.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே

குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள ஸ்ரீராமபுரம், காளியண்ணன், ராமானந்தா நகர், மாரியம்மன் கோவில் தெரு, சக்தி சாந்தி நகர், சாய் அபிராமி நகர், பிருந்தாவன் கார்டன், கவின் கார்டன், ஜெயராம் எக்ஸ்டன்சன் மற்றும் இதர சாலைகளில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல். | 10,25,000 | M/S RS INFRA ஒப்பந்ததாரர் | 0.03% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S R.MUTHUSAMY AND COMPANY ஒப்பந்ததாரர் | 1.75% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/S RS INFRA ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025-2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 24.10.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் சந்தியாவனதுரை, கணபதி நகர், தாமு நகர், முல்லை நகர், | 3,80,000 | M/S RS INFRA ஒப்பந்ததாரர் | 0.11% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிருஷ்ணா நகர், கவின் கார்டன் ஆகிய சாலைகளில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல். | | M/S R.MUTHUSAMY AND COMPANY ஒப்பந்ததாரர் | 26.27% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம். |

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/S RS INFRA ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2025–2026ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 23.10.2025 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் வார்டு எண்–10 Aries Nagar–இல் பாதாள சாக்கடை மற்றும் Culvert அமைக்கும் பணி மேற்கொள்ளுதல். | 30,00,000 | M/S UNITED ENGINEERS ஒப்பந்ததாரர் | 0.24% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/S SS PACHAIAMMAN CONSTRUCTION ஒப்பந்ததாரர் | 0.81% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/S UNITED ENGINEERS ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட நான்காண்டு நலத்திட்டப்பணிகளின் திட்டங்களை தினத்தந்தி தாளில் 29.09.2025 ஆம் தேதி வெளியிடப்பட்டது. இச்செய்தியினை தினத்தந்தி செய்திதாளில் வெளியிடப்பட்டமைக்கு செலவின தொகை ரூ.16.199/–க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை The Daily Thanthi அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** 1 . மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட நாடு போற்றும் நான்காண்டு நலத்திட்டப்பணிகளின் திட்டங்களை தொழில் மலர் புத்தகத்தில் 16..09.2025 ஆம் தேதி வெளியிடப்பட்டது. இச்செய்தியினை தொழில்மலர் புத்தகத்தில் வெளியிடப்பட்டமைக்கு செலவின தொகை ரூ.9.995/–க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அத்தொகையினை Malar Publication Limited அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** 1 மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

13. இந்நகராட்சி நகரின் மத்திய பகுதியில் செல்லும் கீரிப்பள்ளம் ஓடையில் படர் தாமரைகள், நாணல் செடிகள் உள்ளிட்ட செடி கொடிகள் ஓடை முழுவதும் படர்ந்து உள்ளதால் ஓடையில் செல்லும் தண்ணீர் ஆங்காங்கே தேங்கியுள்ளது. தற்பொழுது மழை காலம் துவங்கியுள்ளதால் எதிர் வரும் காலங்களில் மழை நீரும் மேற்படி ஓடையில் வரும் பொழுது ஓடையில் உள்ள செடி கொடிகளால் அடைப்பு ஏற்பட்டு கரையோரங்களில் உள்ள பகுதிகளுக்கு மழை நீர் செல்ல வாய்ப்புள்ளது. இதனை தடுக்கும் விதமாக நாகர்பாளையம் ரோட்டில் உள்ள பாலத்தில் இருந்து பாரியூர் ரோடு, நஞ்சகவுண்டன்பாளையம் பாலம் வரை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கீரிப்பள்ளம் ஓடையினை ஹிட்டாச்சி (Hitachi) வாகனம் கொண்டு படர் தாமரைகள், நானல் செடிகள் உள்ளிட்ட செடி கொடிகளை ஒதுக்கி ஓடையில் தண்ணீர் சீராக செல்ல கரையின் இருபுறமும் அப்புறப்படுத்தி பணி மேற்கொள்ள மணி நேர கணக்கில் (On hours basis) ஹிட்டாச்சி (Hitachi) வாகனத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டி உள்ளதால் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1437/2025/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

14. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டு பகுதியில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால் ஆகியவற்றில் ஏற்படும் அடைப்புகளை சீர்செய்யவும், அவ்வப்போது இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் பாதிப்புகளை சரிசெய்து பணிகளை மேற்கொள்ளவும் அவசியமாகிறது. இந்நிலையில் ந.க.எண். 30850/2025/மாதி3 நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் பருவமழை முன்னேற்பாடுகள் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, அவசர அவசியம் கருதி தனியார் JCB வாகனத்தை கொண்டு பணிகள் மேற்கொள்ள தோராயமாக ஒரு மணிநேரத்திற்கு (One Hour Basis) ரூ. 1100/– வீதம் ரூ– 2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.0044/2025/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

5. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டு பகுதிகளில் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் சில இடங்களில் கால்வாய் வசதிகள் இல்லாததால் தண்ணீர் வடியாமல் தேங்கி நின்று வீடுகளுக்குள் புகுந்து விடும் அபாய நிலை உள்ளது. மேலும் தண்ணீர் தேங்கும் இடங்களில் Sullage Tanker Lorry செல்ல முடியாத அளவிற்கு குறுகிய சாலைகளாக உள்ளது. இந்நிலையில் தண்ணீரை அப்புறப்படுத்த இயலாத சூழ்நிலைகள் உள்ளதால் , இது போன்ற இடங்களில் தண்ணீரை அப்புறப்படுத்த 5 HP Oil Motor இயந்திரம் 2 எண்ணிக்கைகள் அவசியம் தேவைப்படுவதால், தோராயமாக இயந்திரம் ஒன்றிற்கு ரூ. 40,000/– ம் வீதம் 2 மோட்டார்கள் புதியதாக கொள்முதல் செய்து கொள்ள உத்தேச செலவினம் ரூ. 80,000/– ஆகும்.

மேலும், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பிரதான சாலைகளில் பூ மரங்கள் பெரியதாக வளர்ந்துள்ள நிலையில் காற்றுடன் சேர்ந்து மழை பெய்யும் பொழுது மரங்கள் சாய்ந்து விடுகிறது. அவற்றை உடனடியாக அப்புறப்படுத்த மர அறுவை இயந்திரம் (Saw Cutting Machine) அவசியம் தேவைப்படுகிறது. எனவே இயந்திரம் ஒன்றுக்கு தோராயமாக ரூ. 30,000 /– வீதம் 2 இயந்திரம் புதியதாக கொள்முதல் செய்து கொள்ள உத்தேச செலவினம் ரூ. 60,000/– ஆகும். எனவே, மேற்படி 5 HP Oil Motor இயந்திரம் 2 எண்ணிக்கை மற்றும் Saw Cutting Machine 2 எண்ணிக்கை என கொள்முதல் செய்து கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 1,40,000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

( ஒம்)– என்.ஆர்.நாகராஜ்

தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்.
கோபிசெட்டிபாளையம் நகராட்சி